Reproduced from *Nagapattinam to Suvarnadwipa: Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia (Tamil Edition)* edited by Herman Kulke, K. Kesavapany and Vijay Sakhuja (Singapore: Institute of Southeast Asian Studies, 2011). This version was obtained electronically direct from the publisher on condition that copyright is not infringed. No part of this publication may be reproduced without the prior permission of the Institute of Southeast Asian Studies. Individual articles are available at < http://bookshop.iseas.edu.sg >

# பிற்சேர்க்கை 2

# சோழப் பேரரசினை ஸுனியன் என்று குறிப்பிடும் சீன வாசகங்கள்

நோபொரு கராஷிமா மற்றும் டான்சென் சென்

## அறிமுகம்

Songshi-ல் காணப்படும் சோழ அரசைப் (Zhu-nian) பற்றிய விவரங்கள்;
Song huiyao (lidai chaogong), சோழ நாட்டுத் தூதர்களைப் பற்றிய மூன்று பகுதிகள்;
Zhufan zhi ல் காணப்படும் சோழப் பேரரசைப் பற்றிய விவரங்கள்;
Lingwai daida-ல் காணப்படும் சோழ அரசைப் பற்றிய விவரங்கள்;
சோழ மன்னன் என்று நம்பவைத்த Di-hua-jia-luo பற்றிய குறிப்பு;
Songshi-ல் குறிப்பிடப்படும் Pugan(பர்மா) நாட்டைப் பற்றிய விவரங்கள்.

## அறிமுகம்

இந்தப் பிற்சேர்க்கையில், ஸுனியன் என்று சோழ அரசைக் குறிப்பிடும் சோங் (Song கி.பி. 960-1279), யுவான்(Yuan கி.பி. 1279 – 1368) ஆட்சிக் காலங்களைச் சேர்ந்த நான்கு சீன நூல்களின் பகுதிகளை மொழிப்பெயர்த்துள்ளோம். அந்த நூல்கள் Song huiyao[1], Songshi[2], Zhufan zhi[3], Lingwai daida[4] ஆகியவை. அதே காலக்கட்டத்தைச் சேர்ந்த Wenxian tongkao[5] என்ற நூலிலும் சோழப் பேரரசைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதன் மொழிப்பெயர்ப்பு இங்கு இடம் பெறாததற்கான காரணத்தைப் பிறகு பார்ப்போம். Songshi-ல் Zhu-nian-ன் அரசன் என்று குறிப்பிடப்பட்டுள்ள Di-hua-jia-luo-வைப் பற்றிய குறிப்பையும்,

அதன் தொடர்பில் Pu-gan அரசைப் பற்றிய மொழிப்பெயர்ப்பையும் சேர்த்துள்ளோம்.

இந்தப் பிற்சேர்க்கையை எழுதுவதில் நாங்கள் அனுக்கமாக ஒத்துழைத்துள்ளோம் என்ற போதிலும், மொழிப்பெயர்ப்பின் நம்பகத்தன்மை அதை மொழிப்பெயர்த்தவரையே சேரும். Songshi என்பது சோங் அரச பரம்பரையைப் (Song Dynasty) பற்றி Tuotuo என்பவரால் தொகுக்கப்பட்டு கி.பி. 1345-இல் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ வரலாறு ஆகும்.[6] மொத்தம் இருபத்தைந்து வரலாறுகள் உள்ளன. சோழ அரசைப் பற்றிய குறிப்பு, 489ஆம் சுருளில் வாழ்க்கை வரலாறு பற்றிய பகுதியில் வருகிறது. Wenxian tongkao என்பது சீன வரலாறு பற்றிய முக்கிய ஏடு. Ma Duanlin என்பவரால் தொகுக்கப்பட்டு கி.பி. 1321-இல் வெளியிடப்பட்ட அந்த ஏட்டின் "நான்கு திசைகளிலும் உள்ள காட்டுமிராண்டிகள்" என்ற பகுதியில் Zhu-nian அரசைப் பற்றி வருணிக்கப்பட்டுள்ளது.
Song huiyao என்பவை அதிகாரபூர்வ ஆவணங்களின் தொகுப்புகளாகும். அவை ஒவ்வொரு அரச பரம்பரையின் நடவடிக்கைகளையும் பதிவு செய்கின்றன. ஆகவே அரச பரம்பரை வரலாறுகளை எழுதியவர்கள் அதையே அடிப்படையாகக் கொண்டனர். Song huiyao-ன் புராதனமான பத்துத் தொகுப்புகளின் முக்கியமான பகுதிகள் Songshi-ஐ தொகுக்கும்போது அழிந்துபோய்விட்டன. பிற்காலத்தில் மறுபடியும் அச்சிடப்பட்ட சில நூல்களில் இடம்பெற்றுள்ள பகுதிகளே இன்று உள்ளன. துரதிருஷ்டமாக தற்போதுள்ள Song huiyao-ன் பகுதியில் சோழ நாட்டைப் பற்றிய விவரங்கள் காணப்படவில்லை. ஆனால் மூல நூலில் அந்த விவரங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். எஞ்சியிருப்பது சோழ நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட மூன்று தூதுக் குழுக்களைப் பற்றிய விவரமே. அந்தத் தூதுப் பயணங்களைப் பற்றிய மொழிபெயர்ப்புகள் இந்தப் பிற்சேர்க்கையில் இடம்பெறுகின்றன.

அந்த மூன்று ஏடுகளைத் தவிர்த்து, Zhu-nian பற்றிய தகவல்கள் அடங்கிய சோங் (Song) ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த மேலும் இரண்டு முக்கிய நூல்கள் உள்ளன. அவை கடல் மூலம் சென்றடையக்கூடிய தென்கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நாடுகளைப் பற்றியவை. அந்நாடுகளில் வாழும் இனங்கள், பொருளியல் சூழல் பற்றி அந்த நூல்கள் வருணிக்கின்றன. அவை கி.பி. 1178-ல் Zhou Qufei எழுதிய Lingwai daida, கி.பி. 1225ல் Zhao Rugua எழுதிய Zhufan zhi ஆகியவை. சோங் ஆட்சி காலத்தில், குறிப்பாக அதன் பிற்பகுதியில் வெளிநாடுகளுடனான கடல் வணிக உறவுகளைக் கட்டுப்படுத்திய tijushibo[7] என்ற அலுவலகம் முக்கியத்துவம் பெற்றது. தென் சீனாவில் குவாங்சூ (Guangzhou), குவான்சூ (Quanzhou) போன்ற பல வர்த்தக நிலையங்களில் அதன் கிளைகள் தோற்றுவிக்கப்பட்டன. Zhao Rugua

குவான்சூவில் உள்ள tijushibo அலுவலகத்தில் பணிபுரிந்தார். Zhou Qufei சிறிது காலம் தென் சீனாவில் உள்ள Guilin-ன் துணை ஆளுநராக இருந்தார். அதனால் வெளிநாட்டிலிருந்து வரும் மாலுமிகள் மற்றும் வணிகர்களிடமிருந்து கடல் வணிகத் தேசங்களைப் பற்றிய விவரங்களை அவர்களால் பெற முடிந்தது. இருவருமே சோழ நாட்டைப் பற்றி வருணித்திருக்கின்றனர். Zhao Rugua பல தகவல்களை Lingwai daida ஏட்டிலிருந்து எடுத்துக் குறிப்பிடுகிறார் என்ற போதிலும் சோழ நாட்டைப் பற்றிய அவரது வருணனை Zhou Qufei-ன் வருணனையை விட நீளமானது, விவரமானது.

சோங் (Song), யுவான் (Yuan) ஆட்சிக் காலங்களின் போது வெளியிடப்பட்ட சீனப் புத்தகங்கள் பலவற்றில் சோழ நாட்டைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவற்றில் Xu Zizhitongjian[8], Yuhai[9], Shantang xiansheng qunshu kasuo[10], Shilin yanyu[11], Wenchang zalu[12] ஆகியவை அடங்கும். ஆனால் அவற்றில் சோழ நாட்டைப் பற்றிய புதிய விவரங்கள் ஏதும் இல்லை என்பதால் அவற்றை இந்த மொழிப்பெயர்ப்பில் சேர்த்துக் கொள்ளவில்லை.

இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகுதிகள் சில, ஒன்று மற்றதைப் போலவே இருக்கும். Songshi ஏட்டிலும் Wenxian tongkao ஏட்டிலும் இடம்பெறும் Zhu-nian பற்றியத் தகவல்கள் ஒரே மாதிரியானவை. சில சீனச் சொற்கள் மட்டும் மாறியுள்ளன[13]. Songshi-ல் காணப்படும் சில இடங்களின் பெயர்களும், தனிப்பட்டவர்களின் பெயர்களும் Wenxian tongkao-ல் விடுபட்டிருக்கின்றன. ஒரே மாதிரியான பதிவுகள் இடம்பெற்றிருப்பது அந்த இரு ஏடுகளையும் தொகுத்தவர்கள் ஒரே மூலத்தைப் பயன்படுத்தியது ஒரு காரணமாக இருக்கலாம். Songshi பிற்காலத்தைச் சேர்ந்தது என்பதால் அது Wenxian tongkao ஏட்டின் உதவியை நாடியிருக்கக்கூடும். அவசரத்தில் தொகுக்கப்பட்ட Songshi, சோழ நாடு பற்றிய விவரங்கள் உட்பட பல விவரங்களை Wenxian tongkao-ல் இருந்து பிரதி எடுத்தது என்பது தெளிவாகிறது. இருந்தாலும் Songshi, Wenxian tongkao-ல் விடுபட்டுப்போன பலரது பெயர்களையும், இடங்களையும் குறிப்பிடுகிறது. அதனால் சோழ நாட்டைப் பற்றிய பகுதியில் Wenxian tongkao-யைத் தவிர வேறு ஆதாரங்களையும் அது பயன்படுத்தியிருக்கும் என்ற முடிவுக்கு வர முடிகிறது.

சோழ நாட்டில் உள்ள 31 குடியிருப்புகளைப்(buluo) பற்றி Songshi-ல் இடம்பெற்றிருக்கும் தகவல் Wenxian tongkao-ல் இல்லை என்றாலும், Zhufan zhi என்ற மற்றொரு நூலில் இருக்கிறது. அந்தத் தகவல்களைத் தெற்காசியாவில் இருந்து வந்த மாலுமிகளிடமும் வணிகர்களிடமும் Zhao Rugua பெற்றிருக்கக்கூடும். அதே வேளையில், Zhufan zhi-ல் இடம்பெற்றுள்ள சில பகுதிகள் Lingwai daida-விலிருந்து எடுக்கப்பட்டவை. அதனால் Wenxian

tongkao-வை எழுதியவர் Zhufan zhi, Lingwai daida ஆகிய நூல்களைப் பார்த்து எழுதியிருக்க வேண்டும். அந்த ஐந்து நூல்களிலும் இடம்பெறும் ஒரே மாதிரியான பகுதிகள், வெளிநாடுகளைப் பற்றிய தகவல்களைச் சீன எழுத்தாளர்கள் பகிர்ந்து கொண்டனர் என்பதைக் காட்டுகிறது. அதனால் சோழ நாடு போன்ற வெளிநாடுகளைப் பற்றிய தகவல்களின் மூலம் எது என்பதை அடையாளம் காண்பதற்குச் சிரமமாக உள்ளது.

Wenxian tongkao-ல் உள்ள சோழ நாட்டைப் பற்றிய குறிப்புகளை Marquis d’Hervey de Saint-Denys[14] என்பவர் கி.பி. 1883-இல் பிரெஞ்சு மொழியில் மொழிப்பெயர்த்தார். அவர் செய்த மொழிப்பெயர்ப்பின் அடிப்படையில் பிறகு ஆங்கில மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டது[15]. Friedrich Hirth, W.W.Rockhill ஆகியோர் கி.பி.1911-இல் Zhufan zhi-ஐ ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தனர்[16]. Lingwai daida-வை ஜெர்மன் மொழியில் மொழிப்பெயர்த்தார் Almut Netolitzky என்பவர்[17]. ஆனால் Songshi-ல் உள்ளவை இதுவரை எந்த மேற்கத்திய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது இல்லை. Wenxian tongkao-ன் பிரெஞ்சு, ஆங்கில மொழிபெயர்ப்புகளைச் சீனர் அல்லாத கல்வியாளர்கள் பரவலாக பயன்படுத்தி வந்திருந்த போதிலும் அவற்றில் திருத்தப்பட வேண்டிய பல தவறுகள் உள்ளன. Songshi-ல் காணப்படும் தகவல்களை ஒத்திருப்பதால் Wenxian tongkao-ன் மொழிப்பெயர்ப்பை இங்கு நாங்கள் வெளியிடவில்லை. இரு நூல்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. சொல்லப் போனால் Wenxian tongkao-ன் புதிய மொழிப்பெயர்ப்பே இந்த பிற்சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சீன எழுத்துக்களை ஆங்கிலத்தில் படிப்பதற்கு தற்போதைய அனைத்துலக முறையான pinyin-ஐ நாங்கள் பயன்படுத்தியிருக்கிறோம். இது d’Hervey de Saint-Denys, Hirth, Rockhill ஆகியோர் பயன்படுத்திய Wade-Giles முறைக்கு மாறுபட்டது. பதிமூன்றாம் நூற்றாண்டில் தென் சீனாவில் நடைமுறையில் இருந்த உச்சரிப்புப் பாணியிலேயே, ஜப்பானியர்களும், கொரியர்களும் சீனச் சொற்களை இன்றும் உச்சரிக்கின்றனர்.[18] இடங்கள், நபர்களின் பெயர்களைத் தமிழில் மாற்றும் போது Pinyin முறையே கையாளப்பட்டிருக்கிறது.

## 1) சோங்ஷியில் (Songshi) உள்ள சோழ (Zhu-nian) அரசு பற்றிய விவரங்கள்.[19] நோபொரு கராஷிமாவின் (Noburu Karashima) குறிப்புகளுடன் மொழிப்பெயர்க்கப்பட்டது

கிழக்கில், கடலில் இருந்து ஐந்து லி(li)[20] தொலைவில் (ஒரு li என்பது அரை கிலோமீட்டர் தூரம்) ஸுனியன் நாடு இருக்கிறது. தியன்ஸுவை(Tian-zhu)[21] அடைய மேற்கே 1,500 li செல்ல வேண்டும். தெற்கே 2,500 li சென்றால்

லுவோ லான் (Luo-lan)[22] வரும். வடக்கே 3,000 li தொலைவில் துன்தியன் (Dun-tian) உள்ளது.[23] ஆதி காலத்திலிருந்தே அந்நாட்டுக்கும் சீனாவுக்கும் இடையில் தொடர்புகள் இருந்ததில்லை. அந்நாட்டை அடைவதற்கு கடல்வழியாகக் குவாங்சூவில் (Guangzhou) இருந்து 411,400 li பயணம் செய்தாக வேண்டும்.

அந்தச் சாம்ராஜியத்தில் ஏழு அடி உயரமுடைய ஏழு மதில் சுவர்களைக் கொண்ட நகரம் ஒன்றுள்ளது. அதன் வெளிச்சுவர், வடக்கிலிருந்து தெற்கு வரை 12 li தொலைவும், கிழக்கிலிருந்து மேற்கு வரை 7 li தொலைவும் உள்ளது[24]. ஒவ்வொரு மதில் சுவருக்கும் இடையில் நூறு அடி இடைவெளி உள்ளது. முதல் நான்கு மதில் சுவர்கள் செங்கல்லால் ஆனவை. அதற்கு அடுத்த இரண்டும் களிமண்ணால் ஆனவை. ஆகக் கடைசி மதில் மரத்தால் ஆனது. ஒவ்வொரு சுவருக்கு இடையிலும் பலவகை பூச்செடிகளும் பழமரங்களும் உள்ளன. சுற்றிலும் நீரோடைகள் ஓடும். முதல் மூன்று சுவர்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் மக்கள் வாழ்கின்றனர்.[25] நான்காம் மதில் சுவர் வளாகத்தில் நான்கு அமைச்சர்கள் வசிக்கின்றனர். ஐந்தாம் வளாகத்தில் மன்னரின் நான்கு மகன்கள் வாழ்கின்றனர். ஆறாவது மதில் சுவர் வளாகத்தில் புத்த மடாலயங்கள் உள்ளன. அங்கு நூறு பௌத்த பிக்குகள் வசிக்கின்றனர். ஏழாவது மதில் சுவருக்குக்கு உட்பட்ட அரணில், 400க்கும் அதிகமான அறைகளைக் கொண்ட அரண்மனை உள்ளது.[26]

மன்னரின் ஆட்சியின் கீழ் 31 குடியிருப்புகள் உள்ளன.[27]

மேற்கே உள்ள 12 குடியிருப்புகள்: Zhu-du-ni, Shi-ya-lu-ni, Luo-pa-li-bie-pa-yi, Bu-lin-pa-bu-ni, Gu-tan-bu-lin-pu-deng, Gu-li, Suo-lun-cen, Ben-ti-jie-ti, Yan-li-chi-li, Na-bu-ni, Zhe-gu-lin மற்றும் Ya-li-zhe-lin ஆகியவை.

தெற்கே உள்ள 8 குடியிருப்புகள்:Wu-ya-li-ma-lan, Mei-gu-li-ku-di, She-li-ni, Mi-duo-luo-mo, Qie-lan-pu-deng, Meng-qie-lie-gie-lan, Pa-li-pa-li-you மற்றும் Ya-li-chi-meng-qie-lan ஆகியவை.

வடக்கே உள்ள 12 குடியிருப்புகள்:[28] Bo-luo-ye, Wu-mo-li-jiang, Zhu-lin, Jia-li-meng-que-lan, Qi-jie-ma-lan, Wo-zhe-meng-qie-lan, Qi-jie-ma-lan, Wo-zhe-meng-qie-lan, Pi-lin-qie-lan, Pu-leng-he-lan, Bao-pa-lai, Tian-zhu-li, Lu-po-luo[29] மற்றும் Mi-meng-qie-lan ஆகியவை.

தற்போதைய மன்னர், அரச பரம்பரையின் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர். பொதுமக்களுள் ஒருவர் ஏதாவது குற்றம் புரிந்தால், அதற்குத்

தீர்ப்பு வழங்குமாறு அமைச்சர் கேட்டுக் கொள்ளப்படுவார். சிறிய குற்றமாக இருந்தால், குற்றவாளி மரச் சட்டத்தில் கட்டப்பட்டு, மூங்கில் கழியால் 5 முதல் 100 தடவை அடிக்கப்படுவார். குற்றம் பெரிதாக இருந்தால், குற்றவாளியின் தலை துண்டிக்கப்படும் அல்லது யானையின் காலால் நசுக்கப்படுவார்.

விருந்துகளின்போது, மன்னரும் நான்கு அமைச்சர்களும் அரியணைப் படிகளுக்கு முன்னாள் மண்டியிட்டு மரியாதை தெரிவிப்பர்.[30] அதன் பிறகு அவர்கள் ஒன்றாக அமர்ந்து ஆடல், பாடல் போன்ற கேளிக்கைகளை ரசிப்பர். அவர்கள் மது அருந்துவதில்லை, ஆனால் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வெள்ளை நிற பருத்தி ஆடைகளையே விரும்பி அணியும் அவர்கள், அவித்த அரிசி அல்லது கோதுமை பலகாரங்களை உண்கின்றனர். உணவு பரிமாறவும் இதர வேலைகளைச் செய்வதற்கும் பணிப் பெண்கள் உள்ளனர்.[31]

திருமண ஏற்பாடுகளைச் செய்யும்போது, மாப்பிள்ளை வீட்டுக்கார்கள் இடைத்தரகராக ஒரு மாதை தங்கம் அல்லது வெள்ளி மோதிரத்துடன் பெண் வீட்டுக்கு அனுப்பி வைக்கின்றனர். இரண்டு நாள் கழித்துப்[32] பெண் வீட்டார்[33] மாப்பிள்ளை வீட்டாரைச் சந்திப்பர். அப்போது பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் வழங்கும் நிலம், கால்நடைகள், மது வகைகள் போன்ற பரிசுப் பொருட்கள் சபையில் அறிவிக்கப்படும். அத்துடன் பெண் வீட்டார் மாப்பிள்ளைக்குத் தங்கம் அல்லது வெள்ளி மோதிரம், திருமண ஆடை,[34] திருமணத்துக்குப் பெண் அணியும் பட்டாடை ஆகியவற்றைப் பரிசாக வழங்குவர். மாப்பிள்ளைக்குப் பெண் பிடிக்கவில்லை என்றால், அவர் தனக்குத் தரப்படும் பரிசுப் பொருட்களை ஏற்கக்கூடாது. பெண்ணுக்கு அந்தத் திருமணத்தில் விருப்பமில்லை என்றால், தனக்கு வழங்கப்பட்ட பொருட்களை இரு மடங்காகத் திரும்பத் தர வேண்டும்.

போர்க்களத்தில் அவர்கள் யானைகளை முன்னால் நிறுத்துகின்றனர். அதன் பின்னே கேடயம் ஏந்திய வீரர்கள் செல்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் வேல்களை(ஈட்டி) ஏந்திய வீரர்களும், நீண்ட வாள்களை ஏந்திய வீரர்களும், வில் அம்புகளை ஏந்திய வீரர்களும் வரிசையாகச் செல்கின்றனர். நான்கு அமைச்சர்களும் தங்களுக்கிடையில் படைகளைப் பிரித்துக் கொள்வர். இந்த நாட்டுக்கு 2,500 li தென்கிழக்கே Xi-lan-chi[35] என்ற நாடு இருக்கிறது. இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் அவ்வப்போது சண்டை நடைபெறும்.

இந்தச் சாம்ராஜியத்தில் முத்துக்கள், யானைத் தந்தங்கள், பவளம், கண்ணாடி, பாக்கு, ஏலக்காய் மற்றும் ji-bei bu[36] ஆகியவை கிடைக்கின்றன. நீண்ட வால் கொண்ட பறவைகளும் (pheasant) கிளிகளும் நிறையக் காணப்படுகின்றன. அங்குக் காணப்படும் காய்-கனி வகைகள் கடுக்காய்

(myrobalan), முருங்கை(wisteria), பாரசீக பேரீச்சம், தேங்காய், gan-luo[37], ku,-lun-mei,[38] பலாப்பழம் ஆகியவை. அங்குக் கிடைக்கும் மலர் வகைகள், வெள்ளை மல்லிகை, san-si,[39] she-qi,[40] செம்பருத்தி, li-qiu,[41] நீலம், மஞ்சள், பச்சை நிறத்திலான எருக்கம் பூ, வெண்தாமரை, chan-zi[42] மற்றும் shui-jiao[43] ஆகியவை. அங்குப் பச்சைப் பயிர், சோயா மொச்சை, கோதுமை, அரிசி ஆகிய தானியங்கள் கிடைக்கின்றன.

ஆதி காலத்திலிருந்தே இந்த ராஜியம் நம் நாட்டுக்குப் பரிசுகளை அனுப்பியதில்லை. Dazhong xiangfu ஆட்சிகாலத்தின் 8ஆம் ஆண்டு, 9வது மாதத்தில் (கி.பி.1015) அந்நாட்டின் மன்னர் Luo-cha-luo-zha[44] நம் நாட்டு ராஜ சபைக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பினார். அக்குழுவில் துணையமைச்சர் Suo-li-san-wen, இரண்டாவது தூதர் Pu-shu,[45] மூன்றாவது தூதர் Weng-wu,[46] காவலாளி Ya-le-jia மற்றும் சிலர் சோழ மன்னரிடமிருந்து ஒரு கடிதத்துடனும் பரிசுப் பொருட்களுடனும் வந்திருந்தனர்.

ராஜசபைக்கு வந்த San-wen ம் மற்றவர்களும் இரு கைகளிலும் தட்டில் முத்துக்கள், பச்சை மணிகள் ஆகியவற்றை ஏந்தி வந்து அதை அரியணைக்கு முன் கொட்டினர். அதன் பிறகு புறம்சென்று பணிந்தனர். அவர்கள் கூறியதை மொழிப்பெயர்ப்பாளர் மொழிப்பெயர்த்தார். “நெடுந்தொலைவில் இருந்து வந்திருக்கும் நாங்கள் சீன நாகரீகத்திலிருந்து சிறப்பானவற்றை கற்றுக்கொள்ள வந்திருக்கிறோம்” என்று அவர்கள் கூறினர்.

சோழ மன்னர் அனுப்பியிருந்த கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:

உங்கள் அடிமை ராஜராஜனான (Luo-cha-luo-cha) நான், எங்கள் நாட்டுக்குச் சிறிய கப்பலில் வந்தவர்கள் மூலம் தங்கள் நாட்டைத் தற்போது சோங் சாம்ராஜியம் ஆளுவதாக தெரிந்து கொண்டேன். சோங் அரச பரம்பரயைத் தோற்றுவித்த இரண்டு மன்னர்களுக்குப் பிறகு நீங்கள் ஆட்சி ஏற்றிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிகிறோம்.[47] தங்கள் நட்பை பெற வேண்டும் என்று நான் எண்ணினேன். அந்தச் சூரியனைப் போல தங்களுக்குப் பணிவிடை செய்ய விரும்புகிறேன். தங்கள் அரசவையில் எனது தூதர்கள் மூலமாக நான் எனது பரவசத்தைத் தெரிவிக்கிறேன்.[48]

உங்கள் ஆட்சி எல்லையற்றது என்றும் உங்கள் மக்கள் எங்கிருந்தாலும் உங்களுக்கு அடிபணிகிறார்கள் என்றும் அறிகிறேன். நல்லாட்சி தரும் நீங்கள், இதற்கு முன் தோன்றிய மன்னர்களை உங்கள் சாதனைகள் மூலம் மிஞ்சிவிட்டீர்கள். உங்கள் நிர்வாகத்திறனை விண்ணும் மண்ணும் அறியும். உங்களின் செல்வாக்கின் பலம் பிரபஞ்சத்தையும் ஒழுங்குபடுத்தும்; உங்களின்

தெய்வீக சக்தி யாரையும் அழித்ததில்லை; உங்கள் அடக்கம் மகத்தானது; உங்கள் உயர் பண்புகள் தங்களின் மக்களிடத்திலும் காணப்படுகின்றன. உங்கள் நல்லொழுக்கம் செடி கொடிகளைக்கூட பாதுகாத்திருக்கிறது. உங்கள் நம்பகத்தன்மை ஆழ்கடலில் உள்ள மீன்களையும் சென்று சேர்ந்திருக்கிறது. ஆதலால் வானுலகமே உங்கள் உன்னதச் சாதனைகளை மெச்சுகிறது. சாம்ராஜியத்தில் யாருமே இதற்குமுன் இத்தகைய சாதனைகளைச் செய்ததில்லை.

உங்கள் அடிமையாகிய நான், பல தலைமுறைகளாக ஒரு காட்டுமிராண்டி நகரில் வாழ்ந்ததனால், கொசு போல சிறியவன்; காகித நாய் போல அடக்கமானவன். எங்கள் நாடு சீனாவிலிருந்து வெகு தூரம் உள்ளதால் இதுவரை உங்களைப் பற்றித் தெரியாமலும் பரிசுப் பொருட்களை அனுப்பி வைக்காமலும் இருந்தோம். இப்போது உங்கள் புகழ் எங்களுக்கு எல்லை கடந்து ரீங்காரமாகக் கேட்கிறது. இந்தப் பரிசுகளை நேரடியாக வந்து உங்களுக்குத் தர எனக்கு வயது போதவில்லை என்பதை எண்ணி வருந்துகிறேன். நான் கடல்களைக் கடந்து வெகு தூரத்தில் உள்ள ஒரு தேசத்தில் வாழ்கிறேன். இடையில் எத்தனையோ தடைகள் உள்ளன. இருப்பினும் உங்கள் அரண்மனை வாயில் கதவுகளில் இருந்து அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனது நாட்டுப் பரிசுப் பொருட்களை உங்களுக்கு வழங்குவது மாமிசத்தைத் தேடி வரும் எறும்புக் கூட்டத்தைப் போன்றது. ஆதவனைக் கண்டு வளையும் சூரியகாந்தியைப் போல தங்களுக்கு நான் பணியாற்ற விரும்புகிறேன். எங்கள் நாட்டுப் பொருட்களைப் பரிசாக வழங்க 52 பேர் அடங்கிய தூதுக் குழுவை மரியாதையுடன் அனுப்பி வைக்கிறேன். முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட குல்லாய், 21,100 liang (liang = 1 ounce / 37 grams)[49] முத்துக்கள், 60 யானைத் தந்தங்கள், 60 jin[50] சாம்பிராணி ஆகியவை எனது பரிசுப் பொருட்கள்.

Sun-wen மற்றும் உடன் சென்றவர்கள் 6,600 liang முத்துக்களையும் 3,300 jin (ஒரு jin என்பது 16 liang = 1 catty) வாசனைத் திரவியங்களையும் பரிசாக அளித்தனர்.

தொடக்கத்தில் சீனக் கப்பல் ஒன்று தங்கள் தேசத்தை வந்தடைந்திருப்பதாக கேள்விப்பட்ட இராஜராஜனிடம், கடந்த பத்து ஆண்டுகளில் கடலில் எந்தப் புயலும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. சீனாவைச் சேர்ந்த ஒரு முனிவரால் புயல் தடுக்கப்பட்டதாக ஒரு வயோதிகர் மூலம் இராஜராஜன் அறிந்து கொண்டான். அதனால் அவன், San-wen மூலம் சீனாவுக்குப் பரிசுப் பொருட்களை அனுப்பி வைத்தான்.

சோழ நாட்டிலிருந்து[51] புறப்பட்ட San-wen, ஒரு கப்பலில் 77 பகல்களும், இரவுகளும் பயணம் செய்து Na-wu-dan shan, Suo-li-xi-lan shan ஆகியத் தீவுகளைக் கடந்து Zhanbin (ஜாம்பி) தேசத்தைச் சென்றடைந்தான். அங்கிருந்து மேலும் 61 தினங்கள் பயணம் மேற்கொண்டு Yi-ma-luo-li shan தீவைக் கடந்து Gu-luo[52] நாட்டை அடைந்தான். Gu-luo என்ற மலை இருப்பதால் அந்நாட்டுக்கு அப்பெயர். அவர் மீண்டும் 71 நாட்கள் பயணம் செய்து Jia-ba shan, Zhan-bu-luo shan[53], Zhou-bou-long shan ஆகியத் தீவுகளைக் கடந்து San-fo-qi[54] நாட்டை அடைந்தார். அதன் பிறகு மீண்டும் 18 இரவுகளும் பகல்களும் பயணித்து, Man shan[55] மலைக்கு அருகே ஆற்றின் முகவாயிலுக்குக் குறுக்கே சென்று Tian-zhu shan[56] தீவு வழியாக Bin-tou-lang shan[57] அடைந்தார். கப்பலில் இருந்து 100 li கிழக்கே அவர்கள் Xiwangmu[58] (Chinese goddess of immortality)-வின் கல்லறையைப் பார்த்தனர். அதன் பிறகு மேலும் 20 தினங்கள் பயணம் செய்து Yangshan, Jiuxingshan ஆகியத் தீவுகளைக் கடந்து குவாங்சூவில் (Guangzhou) உள்ள Pipazhou[59/60] வை அடைந்தனர். தங்கள் நாட்டை விட்டுப் புறப்பட்ட 1,150[61] தினங்களுக்குப் பிறகே அவர்களால் குவாங்சூவை அடைய முடிந்தது.

வந்தவர்களை உயரிய மரியாதையுடன் நடத்தி Qui-ci நாட்டுத் தூதர்களுக்கு வழங்கப்பட்ட அதே அந்தஸ்தை வழங்கும்படி அரச சபை அலுவலருக்கு[62] மன்னர் உத்தரவிட்டார்[63]. அவ்வாண்டில் மன்னரின் பிறந்தநாளின்போது[64], கொண்டாட்டங்களில் Qisheng chanyuan[65] மடாலயத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகளுடன் சேர்ந்துகொள்ள அனுமதி அளிக்குமாறு San-wen ம் மற்றவர்களும் கேட்டுக் கொண்டனர். அந்தத் தூதர்கள் அடுத்த ஆண்டில்[66] அரசாணையுடனும் ராஜ ராஜ சோழனுக்கான (Luo-cha-luo-zha) விலை உயர்ந்த பரிசுப் பொருட்களுடனும் நாடு திரும்பினர்.

Tianxi ஆட்சி காலத்தின் நான்காம் ஆண்டில் (கி.பி. 1020) Zhu-nian (சோழ நாடு) மன்னர், Pa-lan-de-ma-lie-di என்பவர் தலைமையில் மீண்டும் ஒரு தூதுக் குழுவைப் பரிசுகளுடன் அனுப்பினார். ஆனால் அவர் குவாங்சூ வந்து சேர்ந்தவுடன் நோயினால் மரணமடைந்தார். அவர் கொண்டு வந்த கடிதத்தை குவாங்சூ ஆளுநர் மன்னரிடம் சமர்ப்பித்தார். தூதுக் குழுவுக்கு விருந்துகளை அளித்து விலை உயர்ந்த பரிசுகளுடன் வழியனுப்பி வைக்குமாறு ஆளுநருக்கு மன்னர் உத்தரவிட்டார்.

Mingdao ஆட்சிக் காலத்தின் இரண்டாவது ஆண்டு, பத்தாவது மாதத்தில் (கி. பி. 1033) மன்னன் Shi-li-luo-cha-yin-tuo-luo-zhu-luo[67], ஒரு தூதுக் குழுவை[68] Pu-ya-tuo-li தலைமையில் அனுப்பி வைத்தார். அவர் தங்கத்தால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் நிறைய பரிசுப் பொருட்களையும் கொண்டு வந்திருந்தார்.

முத்துக்களால் ஆன அங்கியும், குல்லாயும் அவற்றுள் அடங்கும். அத்துடன் 105 liang முத்துக்கள். 100 யானைத் தந்தங்களும் பரிசுகளாகக் கொண்டு வரப்பட்டிருந்தன. அரசவை மரியாதைக்கான துணையமைச்சர்[69] சார்பில் தலைமை அலுவலகத் துணை ஆணையர் Wei Zhong அப்பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்[70]. கடல் கொந்தளிப்பில் தமது கப்பல் மூழ்கியதால் பல முறை முயன்றும் தாம் சீனாவை அடைய முடியவில்லை என்று Pu-ya-tuo-li தெரிவித்தார்[71]. மன்னரின் அரியணைக்கு முன் முத்துக்களைப் பரப்பி[72] தம் அன்பைக் காட்ட விரும்புவதாக அவர் தெரிவித்தார். அதன்படியே ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் முத்துக்களுடன் அரச சபைக்குள் பிரவேசிக்க அவர் அனுமதிக்கப்பட்டார். அரசவையில் மண்டியிட்டு, அரியணைக்கு முன் முத்துக்களைச் சிதற வைத்த பிறகு அவர் அங்கிருந்து விலகினார்.

Jingyou ஆட்சிக் காலத்தின் ஐந்தாவது ஆண்டு இரண்டாவது மாதத்தில் (கி.பி. 1034) அரண்மனை நிபுணன் என்ற கௌரவப் பட்டத்துடன், தங்க முத்திரை, கருஞ்சிவப்பு நாடா[73], பண்பட்ட தளபதி போன்ற விருதுகளுடன் Pu-ya-tuo-li நாடு திரும்பினார்.

Xining ஆட்சி காலத்தின் 10ஆம் ஆண்டில் (கி.பி. 1077) Di-hua-jia-lua[74] என்ற மன்னர் 27 பேர் அடங்கிய தூதுக் குழுவை அனுப்பினார். அக்குழுவில் தூதர் Qi-luo-luo, இரண்டாம் தூதர் Nan-bei-pa-da, மூன்றாம் தூதர் Ma-tu-hua-lo ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் கடலை அளவிளான முத்துக்களையும்[75], பெரிய கண்ணாடிக் கிண்ணம்[76], பன்னீர், பெருங்காயம், jinhua[77], pingxiang[78], jinlianhua[79], muxiang[80], கிராம்பு போன்ற பலவகை பரிசுப் பொருட்களையும் கொண்டு வந்திருந்தனர். அரசவைக்குள் நுழைந்த இரண்டாம் மூன்றாம் தூதர்கள், மண்டியிட்டு கொண்டு வந்திருந்த முத்துக்களை தரையில் சிதற வைத்தனர். அதன் பிறகு அவர்களை மகிழ்விக்குமாறு அரசவை அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது. அந்த இரு தூதர்களுக்கும் பட்டங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டன. தகுதி அடிப்படையில்[81] தூதர்களுக்கு ஆடைகளும், பாண்டங்களும் பரிசாக வழங்கப்பட்டன. சோழ மன்னருக்கு 81,800 செப்புக் காசுகள்[82] அடங்கிய சரமும், 52,000 லியாங் (liang) வெள்ளியும் பரிசாக அனுப்பி வைக்கப்பட்டன.

## 2) Song huiyao, lidai chaogong ஆகிய ஏடுகளில் இடம்பெற்றுள்ள சோழ (Zhu-nian) நாட்டுத் தூதர்களைப் பற்றிய மூன்று பகுதிகள்.[83] நோபொரு கராஷிமாவின் குறிப்புகளுடன் மொழிபெயர்க்கப்பட்டது

Dazhong Xiangfu ஆட்சிக் காலத்தின் 8ஆம் ஆண்டு, 9வது மாதம், 2ஆம்

நாளன்று (கி.பி. 1015) சோழ நாட்டு மன்னன் தமது தூதரான Suo-li-san-wen, இரண்டாவது தூதர் Pu-shu[84], மூன்றாவது தூதர் Weng-wu[85], ஆகியோரை பரிசுப் பொருட்களுடன் அனுப்பி வைத்தார். ராஜசபைக்கு வந்த அவர்கள் இரு கைகளிலும் தட்டில் முத்துக்கள், பச்சை மணிகள் ஆகியவற்றை ஏந்தி வந்து அதை அரியணைக்கு முன் கொட்டினர். முத்துக்கள் பதிக்கப்பட்ட அங்கி, குல்லாய் ஆகியவற்றை அவர்கள் பரிசாக அளித்தனர். அத்துடன் முத்துக்கள், யானைத் தந்தங்கள், சாம்பிராணி, வாசைனத் திரவியங்கள் ஆகியவற்றையும் பரிசளித்தனர்.

Shantang kaosuo[86] என்ற மூல நூலில் மேற்கூறப்பட்ட தகவல் இன்னும் விரிவாக உள்ளது. தூதுக் குழுவை Luo-da-luo-zha[87] என்ற சோழ மன்னன் அனுப்பி வைத்ததாக அதில் கூறப்பட்டுள்ளது. சீனாவிலிருந்து சென்ற வணிகர் ஒருவர், சமயச் சடங்குகளை நடத்தி கிழக்கையும் மேற்கையும் தங்கள் அரசர் சாந்தப்படுத்தியிருப்பதாக சோழ மன்னனிடம் தெரிவித்தார். கடந்த பத்து ஆண்டுகளாக கடலில் எவ்வித கொந்தளிப்பும் எற்பட்டதில்லை என்று சோழ மன்னன் மறுமொழி அளித்தான். சீனாவில் ஒரு முனிவர் இருப்பதாலேயே அது சாத்தியமானது என்று பெரியவர் ஒருவரிடமிருந்து கேள்விப்பட்டதாகவும் அவர் கூறினார். அதனால் சீனாவுக்கு அவர் தனது தூதர்களை அனுப்பி வைத்தார்.

Mingdao ஆட்சிக் காலத்தின் இரண்டாவது ஆண்டு, பத்தாவது மாதம், 21வது நாளன்று (கி.பி. 1033) சோழ மன்னன் Shi-li-luo-cha-yin-tuo-luo-zhu-luo[88], ஒரு தூதுக் குழுவை Pu-ya-tuo-li[89] தலைமையில் அனுப்பி வைத்தார். அவர் தங்கத்தால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் நிறைய பரிசுப் பொருட்களையும் கொண்டு வந்திருந்தார். முத்துக்களால் ஆன அங்கியும், குல்லாயும் அவற்றுள் அடங்கும். அத்துடன் முத்துக்கள், யானைத் தந்தங்கள் ஆகியவை பரிசுகளாகக் கொண்டு வரப்பட்டிருந்தன. அரசரின் மீது உள்ள நேசத்தைக் காட்ட “காட்டுமிராண்டி” சடங்கு ஒன்றை மேற்கொள்ள tuo-li அனுமதி கேட்டார். அதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படியே ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் முத்துக்களுடன் அரசவையில் மண்டியிட்டு, அரியணைக்கு முன் முத்துக்களைச் சிதற வைத்த பிறகு அவர் அங்கிருந்து விலகினார்.

Xining ஆட்சிக் காலத்தின் 10ஆம் ஆண்டு, 6-வது மாதம், 7-வது நாளன்று (கி.பி. 1077) சோழநாட்டைச் சேர்ந்த Di-hua-jia-lua என்ற fanwang[90] இரண்டு கடிதங்களுடன் Qi-luo-luo என்ற தூதரை அனுப்பினார். ஒரு கடிதம் “காட்டுமிராண்டி” மொழியிலும் மற்றொன்று சீனத்திலும் இருந்தது. முத்துக்கள், கற்பூரம், காண்டாமிருகக் கொம்புகள், யானைத் தந்தங்கள், சாம்பிராணி, தங்க நூல் இழைத்த ஆடைகள், கண்ணாடிக் கிண்ணம், பன்னீர், மருந்துப்

பொருட்கள் ஆகியவற்றை அவர் பரிசுகளாகக் கொண்டு வந்திருந்தார். அன்று அவரும் இதர தூதர்களும் அரசவைக்குள் நுழைந்து, மண்டியிட்டு, கொண்டு வந்திருந்த முத்துக்களைத் தரையில் சிதற அனுமதிக்கப்பட்டனர். அந்தச் சடங்கிற்கு sandian என்று பெயர். அதன் பிறகு அவர்களை மகிழ்விக்க அரசவை ஊழியர்[91] ஒருவரை மன்னர் அனுப்பி வைத்தார்.

## 3) Zhufan zhi ஏட்டில் சோழ நாடு (Zhu-nian) பற்றி குறிப்பிடப்பட்டுள்ளவை. டான்சென் சென் குறிப்புகளிலிருந்து மொழிப்பெயர்க்கப்பட்டது

Zhu-nain சாம்ராஜியம் மேற்கே உள்ள Yin-du-வின் தென் பகுதியில் உள்ளது. அதனை அடைய, கிழக்கே கடலை நோக்கி 5 li செல்ல வேண்டும்; மேற்கே Tian-zhu ஐ அடைய 1,500 li பயணம் செய்ய வேண்டும்; தெற்கே 2,500 li சென்றால் Luo-lan வரும்; அதன் பிறகு வடக்கே 3,000 li சென்றால் Dun-tian வரும். அந்த நாட்டிற்கு இதற்கு முன் சீனாவுடன் எந்த வணிகத் தொடர்பும் கிடையாது. அங்கிருந்து குவாங்சூ வந்தடைய கடலில் 411,400 li பயணம் செய்யவேண்டும்.[92]

அந்த நாட்டுக்குச் செல்ல விரும்புவோர் Gu-lin-ல் படகு மாற வேண்டும். Pu-gan(பர்மா) வழியாகவும் அந்நாட்டுக்குச் செல்லலாம் என்று சிலர் கூறுகிறார்கள்.[93]

அந்த நாட்டில் ஏழடி உயரமுள்ள 7 கோட்டைகளைக் கொண்ட நகர் ஒன்று இருக்கிறது அதன் வெளிச்சுவர், வடக்கிலிருந்து தெற்கு வரை 12 li தொலைவும்; கிழக்கிலிருந்து மேற்கு வரை 7 li தொலைவும் உள்ளது.[94] ஒவ்வொரு மதில் சுவருக்கும் இடையில் நூறு அடி தூரம் இடைவெளி உள்ளது. முதல் நான்கு மதில் சுவர்கள் செங்கல்லால் ஆனவை. அதை அடுத்த இரண்டும் களிமண்ணால் ஆனவை. ஆகக் கடைசி மதில் மரத்தால் ஆனது. ஒவ்வொரு சுவருக்கு இடையிலும் பலவகை பூச்செடிகளும் பழமரங்களும் உள்ளன. சுற்றிலும் நீரோடைகள் ஓடும். முதல் சுவருக்கும் இரண்டாம் சுவருக்கு இடைப்பட்ட பகுதியில் மக்கள் வாழ்கின்றனர். மூன்றாம் நான்காம் மதில் சுவர்களுக்கு இடைப்பட்ட வளாகத்தில் நான்கு அமைச்சர்கள் வசிக்கின்றனர். ஐந்தாம் சுவர் வளாகத்தில் மன்னரின் நான்கு மகன்கள் வாழ்கின்றனர். ஆறாவது மதில் சுவர் வளாகத்தில் புத்த மடாலயங்கள் உள்ளன. அங்கு நூறு பௌத்த பிக்குகள் வசிக்கின்றனர். ஏழாவது மதில் சுவருக்கு உட்பட்ட அரணில், 400க்கும் அதிகமான அறைகளைக் கொண்ட அரண்மனை உள்ளது. அங்குதான் மன்னர் வசிக்கிறார்.

அந்த ராஜியத்தில் 31 குடியிருப்புகள் உள்ளன.[95]

மேற்கே உள்ள 12 குடியிருப்புகள்: Zhi-du-ni, Shi-ya-lu-ni, Luo-pa-li-bie-pa-yi, Bu-lin-pa-bu-ni, Gu-tan-bu-lin-pu-deng, Gu-li, Po-lun-cen, Ben-ti-jie-ti, Yan-li-chi-li, Na-bu-ni, Zhe-gu-lin மற்றும் Ya-lin-zhe-lin ஆகியவை.

தெற்கே உள்ள 8 குடியிருப்புகள்: Wu-ya-li-ma-lan, Mei-gu-li-ku-di, She-li-ni, Mi-duo-luo-mo, Qie-lan-pu-deng, Meng-qie-lin-gie-lan, Pa-li-pa-li-you மற்றும் Ya-lin-chi-meng-qie-lan ஆகியவை.

வடக்கே உள்ள 12 குடியிருப்புகள்: Bo-luo-ye, Wu-mo-li-jiang, Jia-li-meng-qie-lan, Qi-jie-ma-lan, Wo-zhe-meng-qie-lan, Qi-jie-ma-lan, Wo-zhe-meng-qie-lan, Pi-lin-qie-lan, Pu-leng-he-lan, Bao-pa-lai, Tian-zhu-li, Lu-po-luo[96] மற்றும் Mi-meng-qie-lan ஆகியவை.

பொதுமக்களுள் ஒருவர் ஏதாவது குற்றம் புரிந்தால், அதற்கு தீர்ப்பு வழங்கும்படி அமைச்சர் கேட்டுக் கொள்ளப்படுவர். சிறிய குற்றமாக இருந்தால், குற்றவாளி மரச் சட்டத்தில் கட்டப்பட்டு, மூங்கில் கழியால் 50 அல்லது 70 அல்லது 100 தடவை அடிக்கப்படுவார். குற்றம் பெரிதாக இருந்தால், குற்றவாளியின் தலை துண்டிக்கப்படும் அல்லது யானையின் காலால் நசுக்கப்படுவார்.

விருந்துகளின்போது, மன்னரும் நான்கு அமைச்சர்களும் அரியணைப் படிகளுக்கு முன்னாள் மண்டியிட்டு மரியாதை தெரிவிப்பர். அதன் பிறகு அவர்கள் ஆடிப் பாடி மகிழ்வர். அவர்கள் மது அருந்துவதில்லை, ஆனால் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வெள்ளை நிற பருத்தி ஆடைகளையே விரும்பி அணியும் அவர்கள், அவித்த அல்லது வேகவைத்த மாவு ரொட்டிகளை உண்கின்றனர். உணவு பரிமாறவும் இதர வேளைகளைச் செய்வதற்கும் பணிப் பெண்கள் உள்ளனர். அத்தகைய பத்தாயிரம் பணிப்பெண்கள் அங்கிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் மாற்றி மாற்றி மூவாயிரம் பேர் பணிபுரிகின்றனர்.

திருமண ஏற்பாடுகளைச் செய்யும்போது, மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் முதலில் ஒரு பெண் தரகரைத் தங்கம் அல்லது வெள்ளி மோதிரத்துடன் பெண் வீட்டுக்கு அனுப்பி வைக்கின்றனர். மூன்று தினங்களுக்குப் பிறகு பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரைச் சந்தித்துச் சீதனமாக வழங்கும் நிலம், கால்நடைகள், மது வகைகள் போன்ற பரிசுப் பொருட்களைத் தீர்மானிக்கின்றனர். அப்போது பெண் வீட்டார் மாப்பிள்ளைக்குத் தங்க, வெள்ளி

மோதிரங்கள், திருமண ஆடை, திருமணத்துக்குப் பெண் அணியும் பட்டாடை ஆகியவற்றைப் பரிசாக வழங்குவர். மாப்பிள்ளைக்குப் பெண் பிடிக்கவில்லை என்றால், அவர் தனக்குத் தரப்படும் பரிசுப் பொருட்களை ஏற்கக்கூடாது. பெண்ணுக்கு அந்தத் திருமணத்தில் விருப்பமில்லை என்றால், தனக்குத் தரப்பட்ட பொருட்களை இரு மடங்காகத் திரும்பத் தர வேண்டும்.[97]

அந்த ராஜியத்தில் ஏராளமான உயர் வரிகள் விதிக்கப்படுகின்றன. அதனால் வணிகர்கள் அங்குச் செல்ல அஞ்சுவார்கள். அந்த ராஜியம் Xitian ல் உள்ள பல்வேறு நாடுகளுடன் போர் புரிந்து வருகிறது. அரண்மனையில் ஏழு முதல் எட்டு அடி உயரமுள்ள 60 ஆயிரம் யானைகள் உள்ளன. போரின்போது வீரர்கள் யானையின் மீது ஏறிச் செல்வர். எதிரி தூரத்தில் வரும்போது அவர்கள் வில்லம்புகளால் தாக்குவர். அருகில் வரும்போது வேல்களைப் பயன்படுத்துவர். வெற்றிபெறும் யானைகளுக்குப் பட்டங்கள் வழங்கி சிறப்பிக்கப்படும். சில வேளைகளில் மன்னர் முன் ஆயுதங்கள் கொண்டு சண்டையிட்டு எவ்வித தயக்கமும் இல்லாமல் வீர மரணம் அடைகின்றனர்.[98]

தந்தை, மகன்கள், பெரியவர்கள், தம்பிகள் ஆகியோருக்குத் தனித்தனிப் பாத்திரங்களில் சமையல் செய்யப்பட்டு வெவ்வேறு பாத்திரங்களில் பரிமாறப்படுகிறது. இருந்தாலும் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த மதிப்பு வைத்திருக்கின்றனர்.[99]

இந்த சாம்ராஜியத்தில் முத்துக்கள், யானைத் தந்தங்கள், பவளம், கண்ணாடி, பாக்கு, ஏலக்காய் மற்றும் ji-bei-bu[100] ஆகியவை கிடைக்கின்றன. நீண்ட வால் கொண்ட பறவைகளும் கிளிகளும் காணப்படுகின்றன. அங்குக் காணப்படும் காய்-கனி வகைகள் கடுக்காய் (myrobalan), முருங்கை(wisteria), பாரசீக பேரீச்சம், தேங்காய், gan-luo, kun-lun-mei, பலாப்பழம் ஆகியவை. அங்குக் கிடைக்கும் மலர் வகைகள், வெள்ளை மல்லிகை, san-si, she-qi, செம்பருத்தி, li-qui. நீலம், மஞ்சள், பச்சை நிறத்திலான எருக்கம் பூ, வெண்தாமரை, chan-zi மற்றும் shui-jiao ஆகியவை. அங்குப் பச்சைப் பயிர், சோயா மொச்சை, கோதுமை, அரிசி ஆகிய தானியங்கள் கிடைக்கின்றன. மூங்கில்களும் நிறைய விளைகின்றன.[101]

ஆதி காலத்திலிருந்தே இந்த ராஜியம் நம் நாட்டுக்குப் பரிசுகளை அனுப்பியதில்லை. Dazhong xiangfu ஆட்சிகாலத்தின் 8ஆம் ஆண்டில் (கி.பி. 1015) அந்நாட்டின் மன்னர் நம் நாட்டு அரசவைக்கு முத்துக்கள் உட்பட பல பரிசுப் பொருட்களுடன் தூதர்களை அனுப்பினார். "நெடுந்தொலைவில் இருந்து வந்திருக்கும் நாங்கள் சீன நாகரீகத்திலிருந்து சிறப்பானவற்றைக் கற்றுக்கொள்ள விரும்புகிறோம்"[102] என்று அவர்கள் மொழிபெயர்ப்பாளர்

மூலம் கூறினர். வந்தவர்களை உயரிய மரியாதையுடன் நடத்தி Qui-ci நாட்டுத் தூதர்களுக்கு வழங்கப்பட்ட அதே அந்தஸ்தை வழங்கும்படி அரச சபை அலுவலருக்கு மன்னர் உத்தரவிட்டார். மன்னரின் பிறந்தநாளின்போது, Qisheng yuan மடாலயத்தில் நடந்த கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள சோழ நாட்டுத் தூதர்கள் அனுமதிக்கப்பட்டனர்.[103]

Xining ஆட்சிக் காலத்தின் 10-ஆம் ஆண்டில் (கி.பி. 1077)[104] சோழ நாடு மீண்டும் பரிசுப் பொருட்களை அனுப்பி வைத்தது. அரசர் Shenzong, தூதுக் குழுவினரை வரவேற்க உள் விவகாரங்களுக்குப் பொறுப்பேற்றிருந்த அதிகாரியை அனுப்பி வைத்தார்.[105]

## 4) Lingwai daida ஏட்டில் சோழ நாட்டைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளவை. டான்சென் சென் குறிப்புகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது

மேற்கு தென்னிந்தியாவில் உள்ளது Zhu-nian சாம்ராஜியம். அங்கே செல்ல விரும்புவோர் Gu-lin நாட்டில் படகு மாற வேண்டும். Pugan நாடு (பர்மா) வழியாகவும் அங்குச் செல்லலாம் என்று கூறப்படுகிறது.[106]

அந்த சாம்ராஜிய மன்னரின் மகுடம் சுடர்விடும் முத்துக்களாலும், அரிய வகை ரத்னங்களாலும் ஆனது. மேற்கே பல நாடுகளுடன் அந்த மன்னர் போரிட்டு வருகிறார். அந்த ராஜியத்தில் ஏழு அல்லது எட்டடி உயரத்தில் 60 ஆயிரம் யானைகள் உள்ளன. போரின்போது வீரர்கள் யானையின் மீது ஏறிச் செல்வர். எதிரி தூரத்தில் வரும்போது அவர்கள் வில்லம்புகளால் தாக்குவர். அருகில் வரும்போது வேல்களைப் பயன்படுத்துவர். வெற்றிபெறும் யானைகளுக்கு பட்டங்கள் வழங்கி சிறப்பிக்கப்படும். அவற்றுக்குப் பூவேலை செய்யப்பட்ட போர்வைகள் போர்த்தப்படும். தினமும் அந்த யானைகள் மன்னர் முன் மரியாதை செலுத்தும்.

அந்த நாடு கற்பூர வளையங்கள்[107], வைடூரியம், முத்துக்கள், தந்தம், பல்வேறு நிறங்களில் ஆன நிமிளை (amber), வண்ணப் பட்டாடைகள் போன்றவற்றுக்குப் புகழ்பெற்றது.

அங்கு 10 ஆயிரம் பணிப் பெண்கள்[108] வேலை செய்கின்றனர். தினமும் மூவாயிரம் பணிப்பெண்கள் சுழற்சியில் பணிபுரிகின்றனர்.

அந்நாட்டு மக்கள் வீரம் நிறைந்தவர்கள், யதார்த்தமான வாழ்க்கை வாழ்பவர்கள். அவர்கள் யாருக்கும் அடிபணியமாட்டார்கள். தினமும் சுமார்

பத்து ஜோடி பேர் மன்னர் முன் குத்துவாளுடன் சண்டையிட்டு வீர மரணம் அடைகின்றனர்.

தந்தை, மகன்கள், பெரியவர்கள், தம்பிகள் ஆகியோருக்கு தனித்தனிப் பாத்திரங்களில் சமையல் செய்யப்பட்டு வெவ்வேறு பாத்திரங்களில் பரிமாறப்படுகிறது. இருந்தாலும் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த மதிப்பு வைத்திருக்கின்றனர்.

